செய்தி வெளியீடு எண்:555 நாள்:26.11.2016

**<u>மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு.சிஎச். வித்யாசாகர் ராவ் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் 28–வது பட்டமளிப்பு விழா</u>**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் 28–வது பட்டமளிப்பு விழா மாண்புமிகு தமிழக ஆளுநர் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான திரு. சிஎச். வித்யாசாகர் ராவ் அவர்கள் தலைமையில், சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் வரும் 03.12.2016 அன்று காலை 11.30. மணியளவில் நடைபெறவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான மரு. சி. விஜயபாஸ்கர் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்பார்கள். மத்திய அரசின் சுகாதாரப்பணிகள் இயக்குநரகத்தின் தலைமை இயக்குநர் பேராசிரியர் மரு. ஜெகதீஷ் பிரசாத் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்த உள்ளார்கள். இப்பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் மரு. சே.கீதாலட்சுமி அவர்கள் வரவேற்பு மற்றும் செயலாக்க உரை ஆற்றவுள்ளார்கள்.

இப்பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு, சிறப்பு உயர்நிலை படிப்பு, ஆராய்ச்சி படிப்பு, மருத்துவம், பல்மருத்துவம், இந்திய மருத்துவம், ஓமியோபதி மருத்துவம் மற்றும் உடல்நலம் சார்ந்த ஏறத்தாழ 20,489 மருத்துவ மாணவ மாணவியர்களுக்கு பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இவற்றில் 5,266 மாணவ மாணவியர்களுக்கு நேரடியாகவும், 15,223 மாணவ மாணவியர்களுக்கு கல்லூரி வாயிலாகவும் வழங்கப்படுகிறது.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் மருத்துவத்துறையில் சிறப்பாக பணியாற்றி சாதனை புரிந்த மருத்துவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம், வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள 141 மாணவ மாணவியர்களுக்கு 181 தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**